Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/64/2025

ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!
அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்
ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

நமது மறைமாவட்டம் உருவாகி நவம்பர் 11-ம் தேதி 29 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இவ்வேளையில் நமது மறைமாவட்ட தினத்தை இன்று, நவம்பர் மாதம் 9-ம் தேதி பங்களவில் கொண்டாடுகின்றோம். இவ்வேளையில் கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் சிறப்பாக மறைமாவட்டத்திற்கு வழங்கிய அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்துவோம்.

கடந்த வருட மறைமாவட்ட தினத்தை நவம்பர் 11-ம் தேதி பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து நான் உங்கள் அனைவருக்காகவும் செபித்தேன். இச்சுற்று மடல் வழியாக கடந்த ஒரு வருடம் இறைவன் நமக்கு வழங்கிய நன்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

முன்னாள் உயர் பேராயர் மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள் நவம்பர் 15 முதல் 22 - வரையிலான நாள்களில் நமது மறைமாவட்டத்தைப் பார்வை இட்டார். அருட்தந்தையர், அருட்சகோதரிகள், பொது நிலையினர் என ஒவ்வொருவரையும் சந்தித்து உரையாடியது பெருமைவாய்ந்த நிகழ்வாகவே அமைந்தது.

இவ்வருடம் நமது மறைமாவட்டமானது "கிறிஸ்து யூபிலி ஆண்டு 2025" - யை சிறப்பாக கொண்டாடி வருகிறது. கிறிஸ்து யூபிலியை மையமாகக்கொண்டு நாகர்கோவில் புனித அல்போன்ச திருத்தல ஆலயம், புனித ஜார்ஜியார் திருத்தலம் முன்சிறை மற்றும் புனித சிலுவை ஆலயம் மாலைக்கோடு ஆகியவை யூபிலி ஆண்டு திருத்தலங்களாக அறிவிக்கப்பட்டது. நாம் அனைவரும் நோன்பிருந்து ஒப்புரவு திருவருட்சாதனம் பெற்று செபத்துடன் இத்திருத்தலங்களுக்கு சென்று பாவ பரிகார ஜெபம் ஏறெடுத்ததோடு பரிபூரணப் பலன் "தண்ட விமோஜனம்" பெற்றுக்கொண்டோம். நமது மறைமாவட்ட பக்த சங்கங்கள் அனைத்தும் கிறிஸ்து ஜூபிலி ஆண்டு 2025 என்பதை மையக்கருத்தாக கொண்டு ஏராளமான நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது. இவ்வேளையில் கிறிஸ்து ஜூபிலி ஆண்டு சிறப்புற ஒத்துழைத்த அனைவரையம் நன்றியோடு நினைக்கின்றேன்.

இறை அழைத்தல்

இவ்வருடம் புதிய குருக்களாக அருட்தந்தை அமன்றோ சன்னி எடக்கூட்டத்தில், அருட்தந்தை சுனில் ஆன்றனி, அருட்தந்தை அகஸ்டின் (அனூப்) தத்தப்பள்ளி

ஆகியோர் திருநிலைப்படுத்தப்பட்டனர். பக்ஸர் மறைமாவட்டத்திற்காக அருட்பொழிவு செய்யப்பட்ட அருட்தந்தை ஜோகேஷ் (ஜாண்) பொளச்சிற அவர்கள் நமது மறைமாவட்டத்தில் ஜூலை 3, 2025 அன்று இணைந்தார். மறைமாவட்ட குருக்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்துள்ளது. இவ்வருடம் நமது மறைமாவட்டத்தில் பணிபுரிய சங்ஙனாச்சேரி, இடுக்கி, பாலா, காஞ்சிரப்பள்ளி, ஆனந்தவாடி மறைமாவட்டங்கள் மற்றும் CMI, MST, SDB போன்ற துறவற சபைகளிலிருந்து வந்திருக்கும் அருட்தந்தையர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

நமது மறைமாவட்ட துறவற சபைகளான CMC துறவற சபைக்கா அருட்சகோதரி இவானா கிறிஸ், SH துறவ சபைக்காக ஜெனிபா மற்றும் LSDP துறவற சபைக்கு அருட்சகோதரி மேரி டெசா வும் தங்களது துறவற திருவுடை பெற்று முதல் வார்த்தைப்பாட்டை ஏற்றுக்கொண்டார்.

ஆலய அர்ச்சிப்பு

பறைக்கோடு கிறிஸ்து அரசர் தேவாலயம் மற்றும் குருசடி, மார்த்தாண்டம் புனித வின்செண்ட் தே பவுல் ஆலயம், குலசேகரம் மறைபரப்பு தளத்தில் புதிதாக கட்டப்பட்ட புனித ஜாண் பால் II ஆலயம், தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் ஆகியவை இவ்வருடம் அர்ச்சிக்கப்பட்டு இறைவழிவாட்டிற்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பக்த இயக்கங்கள்

நமது மறைமாவட்டத்தில் குழந்தை ஈசோ இயக்கம், மிஷன் லீக், மறைக்கல்வி, இளையோர் இயக்கம், மரியாயின்சேனை, குடும்ப நலவாழ்வு இயக்கம், மாதர் ஜோதீஸ், தந்தையர் இயக்கம், பொதுநிலையினர் பேரவை, உறவியம், வின்செண்ட் தே பவுல் இயக்கம், சீனாய் இறையியல், சிறைச்சாலை மேய்ப்புப்பணி, கிறிஸ்தவ ஐக்கிய பேரவை, புலம் பெயர்ந்தோர் பணிக்குழு, கல்வி பணிக்குழு, அருட்பணிபேரவை, பாடகற்குழு, சீனாய் தியான இல்லம், இறையழைத்தல் மற்றும் திருப்பணியாளர்கள் இயக்கம் மற்றும் வழிபாட்டுக்குழு ஆகியவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மறைமாவட்ட மறைக்கல்வி நிலையமானது பங்களவில் 25 மற்றும் 50 வருடங்களாக மறைக்கல்வி ஆசிரியர்களாக பணி செய்தவர்களை கௌரவித்து பாராட்டு விழா ஏற்பாடு செய்தது.

புனித வின்செண்ட் தே பவுல் சபையின் தக்கலை மத்திய பேரவையின் கீழ் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை அருகே அமைந்துள்ள “விடியல் அருள் அவை நடுவம் (VAAN) என்ற கட்டிடத்தை ஏழை எளிய மக்களின் நலனுக்கான தக்கலை மறைமாவட்ட முதல் ஆயரும், சீரோமலபார் சபையின் முன்னாள் உயர்பேராயருமான மார் ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி அவர்கள் திறந்து வைத்தார் என்பது பெரிமைக்குரிய ஒன்றாகும்.

இந்த வருடம் பொதுநிலையினர் பணிக்குழு, நமது மறைமாவட்டத்தை சேர்ந்த மக்களுக்கு நலவாரிய அட்டை வழங்கி தனது பணியை தொடங்கியது.

நமது மறைமாவட்டத்தில் செயல்படும் மரியாயின் சேனை தக்கலை கொமிசியத்தின் கீழ் ஆறு கூரியக்களுக்கும் அவற்றிற்கு ஆன்ம இயக்குநர்களையும் நியமித்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

நமது மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் அன்னையர் சீரோமலபார் குளோபல் மாதார் ஜோதீஸ் பொறுப்பாளர்கள் ஒருங்கிணைக்கும் Online ஜெபமாலையில் பங்குபெறுகிறனர் என்பது மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்க்கின்றது.

பிறரன்பு பணி

கடந்த வருடம் மழையினால் பதிக்கப்பட்ட வயநாடு மக்களின் நலனுக்காக நமது மறைமாவட்ட பங்குகள் மற்றும் நிறுவனங்கள் சார்பாக ரூ 15,16,175/- வழங்கப்பட்டது. இது நமது மறைமாவடட் மக்களின் பிறரன்பு பணியை ஈகை மனப்பான்மையையும் எடுத்துக்கூறும் வகையில் அமைந்திருந்தது.

மறைத்தொண்டு பணிகள்:

தென்காசி மாவட்டம் சுந்தரபாண்டியபுரத்தில் அமைந்துள்ள நித்திய சகாய மாதா மறைத்தொண்டு தளத்தில் ஒரு இடம் கட்டிடத்துடன் வாங்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டு வருகிறது. தென்காசி, மேக்கரையில் அமைந்துள்ள புனித ஜார்ஜியார் மறைத்தொண்டு தளத்தின் 25 ஆம் ஆண்டு யூபிலி நிறைவானது ஏப்ரல் மாதம் கொண்டாடப்பட்டது.

நமது மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட மறைத்தொண்டு பணித்தளமான தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ராஜாபுதுக்குடி பகுதியில் புதிய ஆலயம் கட்டப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. இதன் அருகில் TN-குளம் என்னும் ஊரில் புதிதாக மறைப்பரப்பு பணிதளம் அமைக்கப்பட்டு, ஓலை குடிசையில் செபங்கள் நடைபெற்று வருகிறது.

தேனி - கம்பம் அருகே அமைந்துள்ள மறைத்தொண்டு தளமானது அங்கூர்பாளையம் கிராமத்தில் மக்களை ஒருங்கிணைத்து கிராம விழா கொண்டாடப்பட்டது.

தக்கலை மறைமாவட்டத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் ஆன்மீக தேவைகளை கருத்தில் கொண்டு கர்நாடகா பெங்களூரில் வைத்து அவர்களது சங்கமம் நடைபெற்றது.

மதுரை, விருதுநகர், இராமேஸ்வரம் மற்றும் தென்காசி ஆகிய பகுதிகளில் நமது மறைமாவட்ட திருத்தொண்டு பணிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது மறைமாவட்ட மக்கள் இம்மறைப்பணி தளங்களை பார்வையிட்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்கின்றீர்கள் என்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கேரளாவில் உள்ள தொடுபுழாவில் மூலமற்றம் என்னும் இடத்தில் நமது மறைமாவட்ட பணிகளுக்காக தனது இடத்தை அளித்து “சினேக வில்லா” என்னும் முதியோர் காப்பகம் நடத்த உதவி செய்துவரும் திருமதி மெர்சி ஜோஸ் காப்பன் அவர்களை மறைமாவட்டம் நன்றியோடு நிறைவு கூருகிறது. அவரது பெருந்தன்மைக்கு மற்றொரு சான்றாக, நோய்தடுப்பு சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டிடம் நமது மறைமாவட்டத்திற்கு வழங்கியுள்ளார் என்பதை இந்நேரத்தில் மிக்க நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

இறந்தோர் நினைவு

கன்னியாகுமரி மிஷன் மற்றும் தக்கலை மறைமாவட்டத்தில் மறைதொண்டு பணியாற்றி இறைவனடி சேர்ந்த அருட்தந்தை ஜோஸ் கூலிப்புரக்கல் CMI, அருட்தந்தை ஜார்ஜ் தேவலக்கர CMI, அருட்தந்தை செபாஸ்டின் பினேல் CMI, அருட்தந்தை ஜோசப் மடத்தில், அருட்சகோதரி மரிய கொரட்டி அழகன்பறம்பில் SDS, அருட்சகோதரி ஆலிஸ் விஜி CMC, அருட்சகோதரி எல்ஸி மேத்யூ SDS, அருட்சகோதரி பிரிஜிட் பால் தெக்கேபறம்பில் SDS, அருட்சகோதரி ஹெலேனா கோம்பனதோட்டத்தில் SDS, அருட்சதோகரி மெர்லின் ஜோஸ் CMC, அருட்சகோதரி மேரி ஜோசப் OMMI, அருட்சகோதரி ஜோசியா SDS, அருட்சகோதரி சோபியா சாக்கோ SDS, அருட்சகோதரி மேரி தோமஸ் SDS, அருட்சகோதரி டிரீசா ஜோசப் SDS ஆகியோரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காக இவ்வேளையில் செபிப்போம்.

29 ஆம் மறைமாவட்ட தின கொண்டாட்டத்தில் பங்கேற்கும் உங்கள் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நான் 14-ம் லியோ திருத்தந்தை அவர்களை நேரில் சந்தித்து நமது மறைமாவட்டத்தை அவருக்கு அறிமுகம் செய்து நமது பணிகளுக்காக செபிக்கவும் வேண்டிக்கொண்டேன். நமது மறைமாவட்டம் மறைத்தொண்டு பணிகளில் மேலும் சிறப்புற இவ்வேளையில் உங்கள் செப உதவியையும் கேட்டுக்கொள்கிறேன். நாம் மறைமாவட்டம் என்னும் நிலையில் ஒரே குடும்பம் என்ற உணர்வில் வாழவும் இறைப்பணியில் ஈடுபடவும் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் உங்கள் முயற்சிகளையும் உங்கள் தேவைகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
03.11.2025

✞ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடலை 09.11.2025, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் மறையுரைக்குப்பின் வாசிக்க வேண்டும்.